1995 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்:

(அ) சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

எல்.டி.டி.இ.-யைப்பற்றிக் குறிப்பிடும்போது சுப்ரமணியன் சுவாமி தெரிவித்த சொல் ஆதி திராவிட மக்களை இழிவுபடுத்துவதால் அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கை குறித்து.

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்காரம், திரு. செல்வராஜ், திரு. சஞ்சய் ராமசாமி மூன்று பேரும் எழுந்து நின்றால் எப்படி?

திரு. ஆர். சிங்காரம்: தலைவர் அவர்களே, நான் ஒருவன் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மக்களை மிகவும் இழிவுபடுத்தும் வகையில் அந்த ஆதிதிராவிடர் இனத்தையே களங்கப்படுத்துகின்ற வகையில் பேசி அதன் மூலமாக தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டுவந்து ** அவரைக் கைது செய்யச் சொல்லி, அவரைக் கைது செய்யப்போகின்ற அந்த நேரத்தில் தப்பித்து பம்பாய்க்கோ, டெல்லிக்கோ சென்றுவிட்டார் சுப்பிரமணியசாமி. இங்கிருந்து நம்முடைய காவல் துறையினரை டெல்லிக்கோ அல்லது பம்பாய்க்கோ அனுப்பி அவரை உடனடியாகக்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கைது செய்து இங்கே கொண்டுவருவதற்கு அரசு ஆவன செய்யுமா? இதுபோன்ற பல தவறுகளை இதற்கு முன்னாலே செய்திருக்கிறார். அவர் ஒரு தகுதியானவராக இருந்திருப்பாரேயானால் இந்த வழக்கை அவர் இங்கு சந்தித்து இருக்க வேண்டும். அவர் தகுதியற்றவர் என்பது இதன் மூலமாக நிரூபணம் ஆகிறது. ஆகவே இதற்கு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே அவர் மீது இருந்த ஒரு குறிப்பிட்ட கம்ப்ளைண்ட் மேலே அது இருந்திருக்கலாம்** என்று நீங்கள் சொல்கிறீர்கள். அது அவைக் குறிப்பிலே வேண்டாம். அது உங்களுக்குத் தெரியாது. அதை முதலமைச்சர்தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி அவர்களும் இதுபற்றி எழுப்ப வேண்டும் என்று கொடுத்தார். திரு. செ.கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே நேற்றைய முன்தினம் தமிழகத்திலே உள்ள 1½ கோடிக்கு மேற்பட்ட ஆதிதிராவிட மக்களின் உணர்வுகளை கொச்சைப்படுத்துகின்ற வகையிலே மனதைப் புண்படுத்தி அவர்களை சாதியின் பெயராலே . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்,

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற 1½ கோடி ஆதிதிராவிடர் மக்கள் என்று இல்லை. உலகத்திலே எங்கெங்கே ஆதிதிராவிடர் மக்கள் இருக்கிறார்களோ அவர்கள் எல்லோரையும் கொச்சைப்படுத்தித்தான் அவர் பேசினார்.

முற்பகல் 11–10

திரு. செ.கு. தமிழரசன்: தலைவர் அவர்களே, அதை முழுக்க நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனாலும் அந்தச் செய்தி இந்த பத்திரிகைகளிலே மட்டும் வெளிவந்ததினாலே நான் அதைக் குறிப்பிட்டேன். ஆக, ஆதிதிராவிட மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளைக் கொச்சைப்படுத்தி, அவர்களுடைய மனதைப் புண்படுத்தி, சாதியின் பெயராலே அவர்களை இழிவுபடுத்திப் பேசிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த டாக்டர்

****மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.**

TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 21] [திரு. செ. கு. தமிழரசன்]

சுப்பிரமணியசாமியின் பேரிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று நேற்றைய முன்தினம் இந்தப் பேரவையிலே ஒரு ஒழுங்குப் பிரச்சினையை கொண்டு வந்தோம். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும், தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களை, உரிமைகளைப் பாதுகாப்பதிலே மிகுந்த அக்கறை கொண்ட அவர்கள், நடவடிக்கை எடுப்பதாக உறுதி சொன்னார்கள். இதுவரையிலும் அந்த நபர் அவருடைய குற்றத்தை மறுக்கவில்லை என்று சொன்னாலும், நேற்றைய பத்திரிகைகளிலே, 'நான் பேசியது உண்மை, ஆனால் அந்தப் பொருளோடு அதற்குக் கொள்ள முடியாது' என்று அவர்கள் அதற்கு வேறு பொருளை திருத்திச் சொல்லி இருக்கிறார்கள். 'பறையா' என்ற அந்த சொல்லுக்கு ஆங்கில அகராதியிலே ஏதோ வேறு சொல் இருப்பதாக, வேறு பொருள் இருப்பதாக அவர்கள் ஒரு தவறான அர்த்தத்தைக் கற்பித்து இருக்கிறார்கள். எந்த அகராதியிலே பார்த்தாலும் அந்தச் சொல்லே இல்லை. ஒரே ஒரு அகராதியிலே அந்தச் சொல் இருக்கிறது. ஆக்ஸ்போர்டு அகராதியிலே அந்தச் சொல் இருக்கிறது. அதிலேயும்கூட அதற்கு என்ன பொருள் இருக்கிறது என்று சொன்னால், "outcast" ஒதுக்கப்பட்டவன் என்கிற வகையிலே அந்தப் பொருள் சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படியே அதைச் சொல்லி இருந்தாலும்கூட அது தவறுதான். அவர் அதைச் சொல்கிறபோது, ** (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழரசன், நீங்கள் சொல்லிய உணர்வுகள் எல்லாம் சரிதான். ** அந்தச் சொற்றொடர்களை அவைக் குறிப்பிலே இருந்து நீக்குகிறேன். ** எனவே, இந்தப் பிரச்சினையில் அவர் இங்கிருந்து தப்பித்துச் சென்று விட்டார்; என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்று கேட்க வேண்டும் என்று சொன்னீர்கள். அந்த அளவோடு கேட்டால் சரியாக இருக்கும்.** அதெல்லாம் அவைக் குறிப்பிலே இருக்க வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுப்பிரமணியன்சாமி அவர்கள் கூறக்கூடாத ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டு, அதற்கு விளக்கமும் தந்து, ஆங்கில அகராதிகளில் இப்படியெல்லாம் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள் சொன்னதைப்போல,

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நானும் ஆங்கில அகராதிகளைப் புரட்டிப்பார்த்தேன். ஆக்ஸ்ஃபோர்டு யுனிவர்சிட்டி டிக்ஷனரி என்ற அந்த அகராதியில் பக்கம் 477-இல் 'பறையா' என்கிற அந்த வார்த்தைக்கு, 'Tamil Paraiyan--Paraiyan; name of the largest of the lower caste in the Southern India; a drummer' என்று சொல்லி, அதற்குப் பின்னாலே, 'member of a very extensive low caste in Southern India, specially numerous in Madras while its members.. என்று அதையும் சொல்லி, அதற்குப் பின்னாலே ஆக்ஃஸ்போர்டு அட்வான்ஸ்டு டிக்ஷனரி பக்கம் 608-லே 'person of low caste or no caste, என்ற அந்தப் பொருளையும் சொல்லி 'social outcast'-- சமூகத்திலேயிருந்து துரத்தியடிக்கப்பட்டவர்கள் என்கின்ற அந்த வார்த்தைகளையும் சொல்லி, அதற்கு அடுத்தபடி ஒரு வார்த்தையை அந்த டிக்ஷனரி என்ன சொல்கிறது என்று சொன்னால், 'ownerless dog'; 'mixed breed' என்கின்ற அந்த வார்த்தையும் சொல்லப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவர் என்று அன்றைக்கே நாம் முடித்தாகிவிட்டது. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற உணர்வை இந்தப் பேரவை தெரிவித்து விட்டது. எனவே அந்த அளவோடு இதை வைத்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) தாமரைக்கனி, இதிலே மேற்கொண்டு வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். உங்கள் பாயின்ட் வேண்டாம்.

திரு. இரா. தாமரைக்கனி: தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்லிவிட்டேன் அல்லவா? இதுபற்றி நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: ஒரே ஒரு கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வார்த்தை, இரண்டு வார்த்தை சொல்லுங்கள் போதும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமைச் சட்டத்தில் தேடப்பட்ட ஒருவருக்குப் பாதுகாப்பு கொடுப்பது, பிளேன் டிக்கெட் எடுத்துக் கொடுப்பது,

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1995 ஏப்ரல் 21] [திரு. இரா. தாமரைக்கனி]

அதற்குப் போன் செய்வது போன்றவைகளெல்லாம் ஒரு மர்ம மாளிகையில் நடந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், பம்பாய் சென்று, பம்பாயிலிருந்து நேரே டெல்லி சென்று, வெளிநாட்டுக்குத் தப்பித்துச் செல்ல ஏற்பாட்டை சுப்பிரமணியன் சாமி செய்து கொண்டிருக்கிறார். ஆகவே, இந்திய அரசு அவருடைய பாஸ்போர்ட்டை முடக்கி, அவர் வெளிநாடு சென்று தப்பிச் செல்வதைத் தடை செய்யவேண்டும். ஏற்கெனவே எமர்ஜென்சி பீரியடில் இப்படித் தப்பித்துச் சென்றிருக்கிறார். இந்திராகாந்தி அவர்கள் பிரதமர் பதவியிலிருந்து நீங்கிய பிறகுதான் வெளிநாட்டிலேயிருந்து வந்தார். ஆகவே, வெளிநாட்டில் தஞ்சம் புகுந்திருக்கிறார்; அடைக்கலம் புகுந்திருக்கிறார். ஆகவே, இப்படிப்பட்ட ** வெளிநாடும் அடைக்கலம் கொடுக்கக்கூடாது. இதுகுறித்து மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன். வெளிநாட்டில் கைது செய்வதற்கு ஏதாவது இந்திய சர்க்காரிடம் அனுமதி வாங்க வேண்டியிருக்கிறதா? ஆகவே, இந்திய இராணுவப் படையும், இந்தியப் போலீசும் (சிரிப்பு) தமிழகப் போலீசும் எல்லாம் போக வேண்டும். ஏன் என்றால், **இருக்கிற காரணத்தினால் இந்திய அரசே ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சஞ்சய் ராமசாமி: சார் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சஞ்சய் ராமசாமி, இதிலே நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்? வேண்டாம். இதிலே அதிகமாக நேரம் எடுப்பது நல்லது இல்லை.

Thiru Sanjay Ramasamy: Hon. Speaker, Sir, the deeds done by Dr. Subramanian Swami yesterday amount actually to contempt of Court as well, for the simple reason that, whereas he has been told by the Court to come down by 11 O' clock today, he has not met with that requirement. Therefore, the government should come forward to move a suo motu contempt petition against him. Apart from that, this Assembly should also pass a Resolution asking him to resign the post which has been given to him because he is now facing a criminal complaint against him and he has absconded. Basically, today, he is a fugitive on the run. Therefore, he should definitely resign his post. Action should also be

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

taken against him, not just for this crime, but for evading an arrest warrant which itself amounts to another crime. So, now, the case becomes even stronger against him. This man always talks as if he adopts a righteous attitude and follows the law. But, he is the first person to break the law by having evaded an arrest warrant. The Court has graciously said, 'Okay, till 11 O'clock tomorrow, you can hold it'. But, knowing very well that he is taking a flight, he has cheated the Court. That amounts to a total contempt of court. This Government should move the Court for Contempt proceedings against Dr. Subramanian Swami and, at the same time, should present a petition to the President to ask that person to resign his post failing which he should be ousted. He is actually a fugitive on the run. The people of Tamil Nadu and the people of India should know that he is none but a fugitive on the run. Thank you.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குப் பேரவை உறுப்பினர்களுடைய உணர்வுகளின் அடிப்படையில் அரசாங்கம் உரிய வகையில் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்று நான் நம்புகிறேன்.

திரு. தாமரைக்கனி பேசுகிற பொழுது ** என்று கூறியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதேபோல, ** என்று சொல்லியதும் நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) வேண்டாம். அது இருப்பது சரியாக இருக்காது.

3. கவன ஈர்ப்பு

(அ) நாமக்கல் பகுதியில் 3-3-1995 அன்று நடந்த சாலை விபத்தில் இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு முதல்வர் நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். அன்பழகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். அன்பழகன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.